# நாணயச் சபை

# இலங்கை மத்திய வங்கி

**2020 ஏப்பிறல் 24 நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2020இன் 04ஆம் இலக்கம்**

**வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் மீது நாணயச் சபை இத்தால் பணிப்புரைகளை விடுத்திருக்கிறது.

1. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய உயர்ந்த வட்டி வீதங்கள் மீதான 2019ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டப் பணிப்புரையின் பணிப்புரை 1.1(i) மற்றும் பணிப்புரை 1.2 என்பனவற்றிற்குப் பதிலீடாக பின்வருவன அமையும்.

   1.1 இலங்கை ரூபா வைப்புக்கள் மீது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படுகின்ற அல்லது செலுத்தப்படுகின்ற உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்;

      (i) கீழேயுள்ள அட்டவணை 01 இற்கு இணங்க பெறப்பட்ட வட்டி வீதங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்;

அட்டவணை 01

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்களுக்கான முதிர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| வைப்பின் காலம் | ஆண்டிற்கு உயர்ந்தபட்ச வட்டி வீதம் |
|---|---|
| 01 மாதத்திற்கும் குறைவான அல்லது முதிர்ச்சி குறிப்பிடாத காலப்பகுதியைக் கொண்ட சேமிப்பு மற்றும் ஏனைய வைப்புக்கள் | துணைநில் வைப்பு வசதி வீதம் |
| தவணை வைப்புக்கள் | |
| 01 மாதம் மற்றும் 03 மாதங்களுக்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் |
| 03 மாதங்கள் மற்றும் 06 மாதங்களுக்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 0.25% |
| 06 மாதங்கள் மற்றும் 01 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 0.50% |
| 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 2.00% |
| 02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 2.75% |
| 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 3.25% |
| 05 ஆண்டுகள் | திறைசேரி உண்டியல் வீதம் + 3.75% |

1.2 படுகடன் சாதனங்களின் மீது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்படுகின்ற அல்லது செலுத்தப்படக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் கீழேயுள்ள அட்டவணை 02 இற்கிணங்க பெறுப்பட்ட வட்டி வீதங்களை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

**அட்டவணை 02**

**உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் படுகடன் சாதனங்களுக்கான முதிர்ச்சியில் உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள்**

| படுகடன் சாதனங்களின் காலம் | உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் |
|---|---|
| 01 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 0.50% |
| 01 ஆண்டு மற்றும் 02 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 2.75% |
| 02 ஆண்டுகள் மற்றும் 03 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 3.25% |
| 03 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டிற்கும் குறைவானவை | திறைசேரி உண்டியல் வீதம் + 3.75% |
| 05 ஆண்டுகள் | திறைசேரி உண்டியல் வீதம் + 4.25% |

2. 2019.10.18 திகதியிடப்பட்ட 2019ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை - வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதங்களுக்கான திருத்தங்கள் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து புறக்கீடு செய்யப்படுகின்றன.

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்